## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

**அசல் வழக்கு எண். 168/2019**

2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய ஜானகி **DW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 07.07.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜானகி | | |
| Husband Name | : கணேசன் | Court | : |
| Village | : திருக்கடையூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 58/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் பிரதிவாதி மற்றும் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | 19.08.1994 | 3ம் பிரதிவாதி ஜானகியின் திருமண அழைப்பிதழின் அசல் **பிவாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 23.11.1994 | வாதியின் தகப்பனார் கோவிந்தசாமி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அனுபவ பாத்திய இனாம் சாசனத்தின் அசல் **பிவாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | -- | தாவா 2வது அயிட்ட சொத்திற்கான 1978 – 1979 மற்றும் 1990–1991 கான 3ம் பிரதிவாதியின் கணவர் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை – 2) **பிவாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | 02.07.2010 | 3ம் பிரதிவாதியின் கணவர் கணேசன் என்பவரின் இறப்பு சான்றிதழின் அசல் **பிவாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.